[11th December 1961

SRI A. GOVINDASAMY : தலைவர் அவர்களே, நிதிக் கமிஷனின் பரிசீலனை 1962-63-க்குள் முடிந்து அடுத்த ஆண்டிலேயே கூடுதலான தொகை நம் ராஜ்யத்திற்குக் கிடைக்க வழிவகை செய்ய முடிவு காணுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1961-62 முடிவுக்குள்ளேயே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுவிடும். ஜனவரி அல்லது பிப்ரவரியிலேயே அறிக்கை வந்துவிடும்.

SRI V. K. KOTHANDARAMAN : சுதந்திரா கட்சித் தலைவர் ஆட்சிக்கு வந்தால் ரெவினியூ வரியையே தள்ளுபடி செய்வதாகச் சொல்லியிருக்கிறாரே, அதைப்பற்றி கனம் அமைச்சருடைய அபிப்பிராயம் என்ன ?

DEPUTY SPEAKER : How does this question arise? The hon. Member cannot get a reply from the Hon. Minister. He should put this question to the Leader of the Swatantra Party.

Block Development Officer (travelling allowance)

*2234 Q.—SRI S. M. ANNAMALAI : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

வடாற்காடு மாவட்டத்தில் 1960-61-ல் ஒவ்வொரு சமுதாய நலத்திட்ட அதிகாரியும் பெற்ற பிரயாணப்படி எவ்வளவு ?

THE HON. SRI C. SUBRAMANIAM :—

	Particulars of staff.	*Amount of fixed travelling allowance per month.* RS. NP.
	(1)	(2)
1	Block Development Officers (Gazetted)	75 00
2	Block Development Officers (Non-gazetted)	60 00
3	Extension Supervisor	40 00
4	Extension Officer (Co-operation)	40 00
5	Extension Officer (Agriculture)	40 00
6	Extension Officer (Animal Husbandry)	35 00
7	Extension Officer (Panchayats)	35 00
8	Extension Officer (Industries)	40 00
9	Social Education Organiser	35 00
10	Extension Officer (Statistics)	17 50
11	Gramasevak (Grade I)	15 00
12	Gramasevak (Grade II and Gramasevikas)	7 50
13	Social Welfare Workers	7 50

SRI S. M. ANNAMALAI : ஸார், பிளாக் டெவலப்மெண்ட் அதிகாரிகளுக்கு குறிப்பிட்ட தொகை டி.ஏ. ஆக இருந்தாலும், மாதத்தில் ஏறத்தாழ 27-28 நாட்கள் வெளியில் செல்லுகிற காரணத்தினால் அலுவலகத்தில் இல்லாத நிலையில் மக்களுக்குச் சில கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இத்தனை நாட்கள்தான் சுற்றுப் பிரயாணம் செய்யவேண்டுமென்று ஒரு உத்திரவு பிறப்பிக்கப்படுமா ?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

11th December 1961]

THE HON. SRI C. SUBRAMANIAM : இது ஆங்காங்கு இருக்கும் வேலையைப் பொறுத்து இருக்கிறது. இதை நிர்ணயித்து முறைப்படுத்துவதற்கு பஞ்சாயத்து யூனியன் சேர்மன் இருக்கிறார், கமிஷனர் இருக்கிறார். இருக்கக்கூடிய வேலையைப் பொறுத்து எந்த அளவு சுற்றுப்பிரயாணம் செய்யவேண்டும், எந்த அளவு அலுவலகத்தில் இருக்கவேண்டுமென்று பார்த்து முடிவு செய்யலாம்.

SRI A. GOVINDASAMY : இப்போது பிளாக் டெவலப்மெண்டைச் சேர்ந்த அதிகாரிகள் சுற்றுப்பிரயாணம் செய்கின்ற அளவுக்கு அவர்களுக்குத் தரப்படும் தொகை சரியாக இருக்குமா? அல்லது பற்றாக்குறையாகத்தான் இருக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : போதுமானதாக இருக்கும் என்றுதான் இந்த அளவுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, இப்போது புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள யூனியன்களில் இருக்கின்ற கமிஷனருடைய பிரயாணப்படி பில்லை சேர்மன் பரிசீலனை செய்து மேலுக்கு அனுப்ப வேண்டிய நிலையில் விதி இருக்கிறது. பிரயாணப்படி பில்லில் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அனுப்பப்படுவதால் சேர்மனுக்குப் புரியவில்லை என்று சொல்லுகிறார்கள். தமிழில் எழுதி அனுப்பும் அளவுக்கு விதிகள் திருத்தப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி இந்தக் கேள்வியில் பதில் சொல்ல முடியாது. கூடுமானவரையில் எல்லாம் தமிழில் வருவதற்குத்தான் முயற்சி செய்யப்பட்டுவருகிறது.

Engineering College for Tiruchirappalli

* 2235 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the management of the Seshasayee Polytechnic has offered to open an Engineering College at Tiruchirappalli; and

(b) if so, the action taken by the Government in that regard?

THE HON. SRI C. SUBRAMANIAM : (a) Yes.

(b) As the Government of India propose to start a Regional Engineering College at Tiruchirappalli, the offer of the Seshasayee Memorial Engineering Committee has not been pursued.

Sugar Mill Workers (Representation)

* 2236 Q.—SRI V. K. KOTHANDARAMAN : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) வடாற்காடு ஜில்லா கூட்டுறவு சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் ஒன்பது கோரிக்கைகளைக்கொண்ட ஒரு மனுவை அனுப்பியுள்ளார்களா?

(இ) அதன்மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் பட்டது?